Department of Education
GOVERNMENT OF WESTERN AUSTRALIA

# பணி உலகுடன் இளையோர் ஈடுபடுவதற்கான தேவை

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

வ◌ேலை, ஊதியத்துடன் வேலை மற்றும் பணியிடத்தில் மதிக்கப்படும் திறமைகள் குறித்து தொழில் உரிமையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மாணவர்களுக்குத் தேவை. இது பல்கலைக்கழகத்துக்குள் நேரடியாக நுழைய விரும்பும் மாணவர்கள், பள்ளியை விட்டுச் செல்லும்போது கூடுதல் பயிற்சி பெற நினைப்போர் அல்லது நேரடியாக வேலைக்குச் செல்ல நினைப்பவர் என அனைத்து மானவர்களுக்கும் இது பொருந்தும்.

பணி உலகில் ஈடுபடுவதால் இளையோர் பள்ளியில் அவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதைத் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ள உதவுவதுடன் அவர்களது எல்லையை விரிவடையச் செய்து அவர்களது நாட்டத்தை அதிகரிக்கச் செய்து வேலைகளின் வகைகளை வெளிச்சமிட்டுக் காட்டி அவர்களுக்கு முன்னால் உள்ள வாழ்க்கைத்தொழில் வழிகளைத் திறந்துகாட்டுகிறது.

இளையோருக்கு வாய்ப்புகள் ஏன் தேவையெனில்:

- அவர்கள் நம்பகமானவர்கள் என்பதை நிரூபிக்க
- எப்படி வேலை செய்வது என்று தெரியுமென்பதைக் காட்ட
- நம்பிக்கையை மேம்படுத்த
- திறமைகளை வளர்க்க.

பணி உலகு அனுபவத்திற்காக இளையோருக்கான வாய்ப்புகளில் அடங்குபவை:

- பகுதிநேர மற்றும் சாதாரண வேலைகள்
- பள்ளித்திட்டம் வாயிலாக பணியிடக் கற்றல் மற்றும் பணி அனுபவம்
- இன்னொரு பணியாளரைக் கவனித்து உள்வாங்குதல்
- தன்னார்வலராகச் சேருதல்
- பணியிட வருகைகள்
- வேலை முன்னோட்டங்கள் மற்றும் உள்ளிருப்புப் பயிற்சிகள்
- விளையாட்டு மன்றங்கள்
- தொழில் முனைவு மற்றும் ‘புதிதாகத் தொழில் தொடங்குதல்’.

இந்த அனுபவம் வேலைவாய்ப்பைப் பெறவும் நீடித்திருக்கவும் தேவையான அறிவையும் திறமைகளையும் உருவாக்கவும் பணியிடத்தில் முன்னேற்றம் காணவும் உதவுகிறது.

D23/0256974
February 2023

CC BY
Exclusions may apply

## பணித் திறன்களைக் கட்டமைத்தல்

பணியிடத்தில் பணித் திறன்கள் மிகவும் மதிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பாராட்டப்படும் பண்புகளாக அல்லது மனோபாவமாகக் கருதப்படுகிறது. பணித் திறமைகளை பணியாளர்கள் வெளிப்படுத்தக்கூடியதன் தேவையை தொழில் உரிமையாளர்கள் வலியுறுத்துவது அதிகரித்து வருகிறது.

தேசிய திறமைகள் வாரியத்தால் அடையாளம் காணப்பட்ட அத்தியாவசிய பணித்திறமைகளில் அடங்குபவை:

- தனிப்பட்டவர்களுக்கிடையில் மற்றும் மக்களைக் கையாளும் திறமைகள்
- நிறுவனம் மற்றும் திட்டமிடும் திறமைகள்
- நம்பகத்தன்மை மற்றும் ஊக்கப்படுத்தல்
- நுட்பமான சிந்தனை மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- தகவல்தொடர்பு மற்றும் குழுவாகப் பணிபுரியும் திறமைகள்
- ஏற்கும் தன்மை மற்றும் தாங்குதிறன்
- டிஜிட்டல் அறிவு

D23/0256974
February 2023